# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
# திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

## வணிகமாணிப் பட்டப்படிப்பு
## புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் - 2025 – Batch IX

மேற்படி கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு நடாத்தப்பட்ட மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், கீழே பெயரிடப்பட்ட பரீட்சார்த்திகள் கற்கைநெறியினை தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மாணவர் பெயர்ப் பட்டியலுக்கான இணைப்பு : https://bitly.cx/fCM2U

பெயரிடப்பட்ட பரீட்சார்த்திகள் கீழ் குறிப்பிட்ட நிகழ்நிலை படிவத்தில் தங்களது விபரங்களை பூர்த்தி செய்து, மின்னஞ்சலுக்கு கிடைக்கப்பெற்ற ஆவணத்தின் பூரணப்படுத்தப்பட்ட வன்பிரதியினை (Hard Copy) பதிவின் போது சமர்ப்பிக்க வேண்டும் (விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்னர் அறிவுறுத்தல்களை கவனத்திற் கொள்ளவும்) **நிகழ்நிலை படிவத்தில் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கான இறுதித்திகதி- 12.11.2025 (புதன்கிழமை)**

நிகழ்நிலை படிவத்திற்கான இணைப்பு : https://bitly.cx/LWtMs

### பதிவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1) நிகழ்நிலை படிவத்தின் பூரணப்படுத்திய உறுதிப்படுத்தப்பட்ட வன்பிரதி.
2) மக்கள் வங்கியில் பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு (மூலப்பிரதி)
3) க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் (மூலப்பிரதியும், உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும்)
4) க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் (மூலப்பிரதியும், உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும்)
5) பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான தகைமையைக் கொண்ட பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் (மூலப்பிரதியும், உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும்)
6) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி)
7) புகைப்பட உறுதிப்படுத்தல் படிவம் (புகைப்பட உறுதிப்படுத்தல் படிவஇணைப்பு: https://bitly.cx/Jzvlo )
8) திருமணச் சான்றிதழ் (பெண்கள்) (மூலப்பிரதியும், உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும்)
9) தேசிய அடையாள அட்டை (மூலப்பிரதியும், உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும்)
10) தற்போது வகிக்கும் பதவியை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

### கற்கைநெறிக்கட்டணம் தொடர்பான விபரம்

| வருடம் | கட்டணம் | கட்டணம் செலுத்தப்பட வேண்டிய காலம் |
|---|---|---|
| 1ம் வருடம் | ரூபா.80,000.00 | பதிவின் போது செலுத்துதல் வேண்டும். |


| | | |
|---|---|---|
| 2ம் வருடம் | ரூபா.70,000.00 | மூன்றாம் அரையாண்டு ஆரம்பத்திற்கு முன்பு செலுத்துதல் வேண்டும். |
| 3ம் வருடம் | ரூபா.70,000.00 | ஐந்தாம் அரையாண்டு ஆரம்பத்திற்கு முன்பு செலுத்துதல் வேண்டும். |
| **மொத்தக் கட்டணம்** | **ரூபா.220,000.00** | |

முதலாம் வருடக் கட்டணமாகிய **ரூபா. 80,000.00** இனை **890092080000060** என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் வைப்பிலிட்டு பற்றுச்சீட்டினை பதிவு செய்யும் போது சமர்ப்பித்தல் வேண்டும். ஏனைய கட்டணங்கள் யாவும் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் முழுமையாக செலுத்தப்பட வேண்டும்.

பதிவினை மேற்கொள்வதற்காக, மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திற்கு **தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தினத்தில் (17.11.2025)** நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்கூறப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுதல், அல்லது போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் குறித்த திகதியில் நேரில் சமுகமளிக்காதோரின் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன், **கொடுப்பனவுகள் எவையும் மீளளிக்கப்படமாட்டாது என்பதனையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.**

## <u>கொடுப்பனவுச்சீட்டின் மாதிரி</u>



## விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் கல்வித்தகைமை சான்றிதழ்களில் கொடுக்கப்பட்டுள்ள பெயருக்கும் விண்ணப்பப்படிவத்தின் கூடுகளில் கொடுக்கப்பட்டுள்ள பெயருக்கும் முரண்பாடுகள் இருப்பின் அப்பெயர்கள் அனைத்தும் உம்மையே குறிக்கின்றன என்பதற்கு சத்தியக் கடதாசி ஒன்றை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். இப்பெயர்களும் பிறப்புச் சான்றிதழில் கொடுக்கப்பட்டுள்ள பெயரும் வேறுபட்டால், திருத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும். திருமணத்தின் காரணமாக பெயர் வேறுபட்டிருப்பின் திருமணச்சான்றிதழின் புகைப்படப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

- மின்னஞ்சல் முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். மின்னஞ்சல் முகவரி இல்லாதோர் ஆரம்பிக்க வேண்டும்.

- பதிவுக்கு தேவைப்படும் கல்வித்தகைமையைப் பரிசீலிப்பதற்கு பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்கு, பரீட்சை ஆணையாளராலும், வேறு பரீட்சைகளானால் பரீட்சை அதிகாரிகளாலும் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மூலப்பிரதி மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலன்றி வேறு சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- பணம் செலுத்திய பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும். பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

- விண்ணப்பதாரியின் கையொப்பம், மத வழிபாட்டு நிறுவனமொன்றின் தலைமை அதிகாரி, பட்டயக் கணக்காளர், அரசாங்க கல்வியதிகாரியின் முகாமைக்குட்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர் அல்லது ஓய்வு பெற்ற அதிபர், கிராம சேவை அலுவலர், சமாதான நீதவான், சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு ஆகியோரில் யாரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**முக்கிய குறிப்பு** : மேற்படி கற்கைநெறிக்குரிய விரிவுரைகள் மற்றும் பரீட்சைகள் முழுவதும் தமிழ்மொழி மூலம் இடம்பெறும்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

*பிரதிப் பதிவாளர்,*
*திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
03.11.2025